# ராஜா என்றால் ராஜாதான்

**மோதி எஸ் பட்டாபிராமன்** B.Com
*192, பெரியகடை வீதி, திருச்சி - 8,*
*போன்: 2700880*

நான் மோதி ராஜகோபால் நினைவாகவே என் வாழ்க்கையை இனிது சுவைத்துக் கொண்டிருக்கிறேன். அவருடைய இனிய தகப்பனார் என்னிடம் பழகுவதற்கு உரிமைக் கொடுத்தார். ஆனால் அந்த பாசப் பிணைப்பு வெற்றிகரமாக உள்ளது. எங்கள் இருவரின் தகப்பனார்களின் பெயர் மோதி ஸ்ரீராமுலு செட்டியார் என்று வைத்தார்கள். என் தந்தை வயதில் மூத்தவராக இருந்ததால் மோதி ராஜகோபால் தகப்பனாரை ஊரில் யாவரும் சின்ன-ஸ்ரீராமுலு என்று அன்போடு அழைப்பார்கள். மோதி குடும்பத்திற்கு ஒரு விடி வெள்ளியாக நம் கதாநாயகன் திகழ்ந்தார். நாங்கள் இருவரும் நகமும் சதையும் போல் இணைப்பிரியா நண்பர்களாக இணைந்திருப்போம். நான் என் தகப்பனாருக்கு 11 குழந்தைகளில் ஒருவன். 10-வது குழந்தை என்றதால் எனக்கு பட்டாபிராமன் என்று பெயர் வைத்தார்கள். எங்கள் இல்லமும் அவருடைய வீடும் அடுத்தடுத்து இருந்ததால் நாங்கள் பழகுவதற்கு மிகவும் ஏதுவாக இருந்தது. என்னுடைய பழைய நினைவுகளின் வாயிலாக மோதி ராஜகோபாலைக் காண்கிறேன்.

மோதி குடும்பம் திருச்சியில் பழமையான பெரிய குடும்பமாகத் திகழ்ந்து வந்தது. இதில் வியப்பு என்னவென்றால் இந்த கதாநாயகன் குடும்பத்தில் இன்று வரை ஒரே ஆண்வாரிசு என இறைவன் வரம் அளித்தார். இவருடைய பள்ளிப்படிப்பு இறுதி ஆண்டில் ஒரு கார் விபத்தில் கொடை வள்ளல் என் சித்தப்பாவை மட்டும் காலன் பறித்துக் கொண்டார். அதில் பயணம் செய்த என் சகோதரர் மோதி ராஜகோபால் பல காயங்களுடன் உயிர் பிழைத்தார். அவரை உடனே ஆஸ்பத்திரியில் சேர்த்து மிகவும் கவனத்துடன் சிகிச்சை அளித்தோம். சுமார் ஒரு மாதம் ஆயிற்று. அதுவரை காலமான செய்தி டாக்டர் ஆலோசனைப்படி கூறாமல் இருந்தார்கள். அவரிடம் இந்தச் செய்தியை சொல்ல வேண்டாமென்று எனக்கு உத்தரவிட்டார்கள். அவர் குடும்பத்தின் பேரில் ஈடுபாடு அதிகமாக இருந்ததால் மனமுவந்து என் தகப்பனார் காரியங்களை செவ்வனே செய்து முடித்தார்.

நல்லவிதமாக ஆஸ்பத்திரியில் சிகிச்சையை வெற்றிகரமாக முடித்து ஆண்டவன் அருளாசியில் இல்லத்திற்கு திரும்பினார். மோதி

ராஜகோபால் தன்னுடைய விதியை நினைத்து மிகவும் வருத்தமடைந்தார். இல்லத்திற்கு அழைத்து வந்த காட்சி என் மனதை விட்டு அகலாமல் பதிந்து விட்டது. குடும்பத்தில் அனைவரும் கண்ணீர் மல்க அவருக்கு சமாதானம் செய்து தைரியம் சொன்னோம். பிறகு அவருடைய வாழ்க்கை முறையே மாறிவிட்டது. மோதி ராஜகோபால் குடும்பத்தில் பெரியவர்களின் அரவணைப்பிலும் அன்னையின் ஆசியிலும் நண்பர்களின் அனுசரிப்பிலும் அடுத்தக்கட்ட வாழ்க்கையை ஆரம்பித்தார்.

உடல்நிலைக் காரணமாக பள்ளிப்படிப்பை வீட்டிலேயே சிறந்த ஆசிரியர்கள் உதவியில் செவ்வனே கற்றுவந்தார். ஆங்கிலம் நன்கு கற்றுத் தேர்ந்து ஒரு முதுகலை மாணவனுக்கு ஒப்பாக சிறந்து விளங்கினார் என்று சொன்னால் மிகையாகாது. முன்னேற்றத்திற்கு முக்கிய காரணம் திரு.ராமானுஜம் என்ற சிறந்த ஆசிரியரை ஆண்டவரும் ஆசிர்வதித்து அனுப்பி வைத்தார். மேலும் கொஞ்சம் கொஞ்சமாக மோதி குடும்பத்தார்கள் ஆசியுடன் ஊரே மெச்சும்படி வாழ்க்கையில் முன்னேற்றடமடைந்தார். பிறகு எங்கள் மோதியின் குடும்பத்தில் ஒரு துருவ நட்சத்திரமாக ஒளிவீசினார். வாழ்க்கையில் திருப்புமுனையாக வரதராஜுலு அவர்கள் என் சித்தப்பாவின் குடும்பத்திற்கு ஈடில்லா மருமகனாக வர இறைவன் வழிவகுத்தார். ஊரே மெச்சும்படி அந்த குடும்ப முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்.

மோதி ராஜகோபால் இல்லத்திற்கு உலகிலுள்ள அரிய பொக்கிஷமாக எல்லாவித புத்தகங்களும் அவரை வந்தடைந்தன. ஒரு நூல் நிலையம் போல் அவருடைய இல்லம் மாறியது. புத்தகங்களை தான் மட்டும் படித்துப் பயனடையாமல் நண்பர்களுடன் இணைந்து உலக அறிவை விருத்தி செய்து கொண்டார். அத்துடன் இல்லாமல் தன் தகப்பனார் ஆரம்பித்த செயற்கை வைர வியாபாரத்திலும் வெற்றி கண்டு வெகுகாலம் இருந்து வந்த பாசங்களை அரவணைத்துக் கொண்டார். இவருடைய திறமையினால் செயற்கை வைரவியாபாரிகள் சங்கத்தின் தலைமை பதவி இவரை வந்தடைந்தது. சங்கத்தின் தலைவராக எண்ணற்ற முன்னேற்றங்களையும், சாதனைகளையும் செய்து காட்டினார். மோதி ராஜகோபால் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் நான் திருச்சி வியாபார சங்கத்தில் தலைவராக பணியாற்றியதை நினைத்துப் பெருமைப்படுகிறேன். மேலும் அவருடைய தகப்பனார் செய்து வந்த தானதர்மங்களையும் கோயில் கைங்கர்யங்களையும் செவ்வனே செய்து

வந்தார். ஏழைகளுக்கு கல்வி உதவித் தொகைகளை அள்ளிக் கொடுத்து மகிழ்ந்தார். குறிப்பாக கல்லுக்குழி ஆஞ்சநேயர் கோவில், மலைக்கோட்டை தாயுமானவர் கோயில், பெரியகடைவீதி அங்காளம்மன் கோயில்,

எல்லையம்மன் கோயில், ஸ்ரீகன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோயில், இதய தெய்வமாகிறது. திருப்பதி வெங்கடாஜலபதி கோயில் மற்ற எண்ணற்ற ஆலயங்களுக்கு மோதி ராஜகோபால் தன் பொன்னான கரங்களால் ஆலய மேம்பாட்டிற்கு வழிவகுத்தார்கள். கல்வி நிலையங்களுக்கு அள்ளிக் கொடுத்தார். இத்தோடு நில்லாமல் எங்கள் குடும்ப தர்மங்கள் (Mothi Family Trust, Mothi Trust) அவருடைய திறமையால் வெற்றிக்கு கடுமையாகப் பாடுபட்டார். இத்தோடு சேவை மனப்பான்மையுடன் Rotary Club, Charities, Urumu Dhanalakshmi Vidyalaya H.S.S, Urmu Dhanalakshmi College என திறமையுடன் நிர்வாகத்தில் பங்குபெற்று சமூகத்தில் நல்ல பெயர் எடுத்தார். நண்பர்களுடன் பழகுவதில் அவருக்கு நிகர் அவரே. குறிப்பறிந்து எல்லோருக்கும் உதவிக்கரம் நீட்டுவதில் வல்லவர். அவருடைய விருந்தோம்பல், அறிவுத்திறன், வியாபாரத் திறமை பெற்ற பண்பாளர் நமது மோதி ராஜகோபால். எங்கள் ஆர்ய வைஸ்ய சமூகத்திற்கு ஒரு கலங்கரை விளக்கம்போல் திகழ்ந்து வந்தார். எல்லோரும் மெச்சும்படி வாழ்க்கையை நடத்திக் காட்டிவிட்டார் என்று எனக்கு மிகவும் ஆவலாக இருக்கிறது. அவருடைய மூன்று மகன் குடும்பத்தினர் அனைவருக்கும் ஒரே வாரிசு மோதி சீனிவாசன் தந்தை வழியே வெற்றிகரமாக எல்லோரும் மெச்சும் படி வாழ்க்கை சிறக்க வேண்டுகிறேன். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று வாழ்த்தி என் அன்பு சகோதரர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.